உ

கடவுள் துணை

பெரியபாளையம்
மாரியம்மன் பதிகம்,

திருப்போரூர்

டி. கோபால் நாயகர்

அவர்களாற்றமது

மதராஸ், என். சி.

கோள்டன் அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

1914.

17-18 காளத்தியப்ப முதலி வீதி மதராஸ் என். சி.

77

உ

கடவுள் துணை.

பெரியபாளையம்

மாரியம்மன் பதிகம்.

காப்பு - வெண்பா.

பன்னுபுகழ்பெரிய பாளையத்து மாரியின்மேல்
சொன்னபாவிற்குத் துணையாவான் - துன்னுமலர்
வாய்க்குஞ்சரத்தான்செய் வல்பிணியைத்தீர்த்தருணல்
வாய்க்குஞ்சரத்தான் மகிழ்ந்து.

ஆசிரிய விருத்தம்.

தார்தங்குமற்குழலி லங்கபிறை நுதலித்தரித்தசிந்தூரமிலங்கச், சபமேவு விற்புருவமுங்கருணை பொழிகின்ற தண்சரோருக நேத்திரமும், வார்தங்கு கயலொடு சிறந்த சண்பக நாசிவசனுமிர்தக் கொவ்வையாய், மாசற்றசிறுநகையி லங்கவரதாபய வளங்கொள் கரதலமிலங்கப், பார்தங்குகொடியிடை யிலங்ககிண்கிணியொடு பதித்தநூபுரமிலங்கு, பங்கயமதாருசுப மங்களமதாய்வருபதத்துணையை யென்றுகாண்பேன், ஏர்தங்குசெந்நெல்வயல்சூழ் பெரியபாளையத் தெல்லையி லமர்ந்துவாழும், எல்

லன்ன வொளிர்சூரி நல்லன்னநடைவீரி எல்லம்மை மக மாரியே. (௧)

சகலபுவ னேஸ்வரி யனுதரட்சகி யதுலர் சந்ததந் துதிசெய்நிமலி, தத்வபரிபூரணி மகத்தவமிகு காரணி ஜனார்த்தனி யனந்தசயனி, சுகவிரதபூஷணி துலங்குகல் யாணி சுலக்ஷணி விலக்ஷணகுணி, ஜோதிர்மயானந்தசே ஷகங்கணி வரதஹஸ்தி கருணாகடாக்ஷி, விகசிதமிகுந்த முக சந்திரவிம்பப் பிரபல விஜயசிங்காரிவிமலி, வீறுதற் பரி சர்வலோகபூஜித தனயவிசாலினி யனந்தரூபி, இக பரநலம்பலதரும் பெரியபாளையத் தெல்லையிலமர்ந்துவா ழும், எல்லன்ன வொளிர்சூரி நல்லன்னநடைவீரி எல்ல ம்மை மகமாரியே. (௨)

உலகினிலடங்காத பேய்பில்லிசூனியமு ரத்தகாட் டேரிமற்று, முன்னரிய பூதப்ரேதமோகினி முனிகளொ ழியாது கொடுமைசெய்யும், விலகரிய சூலைபெறு வயிறு குஷ்டங்கொடிய மேகரோகங்கள்மண்டை, வேதையொ டு கைகால்பிடிப்புநீ ரிழிவுபலவிதமான வெம்பிணிகளும், கலகமிடுபகைஞர் வஞ்சகமுமின்னுபயபத கமலமைதனைச் சிந்தையிற், கருதிநிமிஷப்பொழுதினியாணிக்கிலிவையெ லாங் கானனீரென்றேடுமே, இலகுபுவ னுலவிபொழில்

சூழ் பெரியபாளையத் தெல்லையி லமர்ந்துவாழும், எல்ல ன்னவொளிர்சூரி நல்லன்னநடைவீரி எல்லம்மை மகமா ரியே- (ரு)

ஆதித்தவாரங்கடோறுநின் சன்னதியடுத்தன்புகூர் ந்துவந்தே, அவரவர்கள்கோரிய பிரார்த்தனைக டவருத கண்டதீபங்கள்வைத்தும், கோதற்றவெள்ளிபொன்னாற் கண்ணடக்கமொடு கூறறியபலவுருப்பும், குழிவியொடு தொட்டிலுஞ் சிலவிம்பவண்மையுங் குணமொடு செலு த்திநெஞ்சம், பேதித்திடாமல்வேப்பஞ்சீலைபூண்டொளி பிறங்குமம் மாடவீதிப், பிரதக்ஷணஞ்செய்வ தன்றியுஞ் செடிலாடல் பேணிப்புரிந்து மகிழும், எதிற்பெரும் புக ழ்மிகும் பெரியபாளையத் தெல்லையிலமர்ந்துவாழும், எல் லன்ன வொளிர்சூரி நல்லன்னநடைவீரி எல்லம்மை மக மாரியே. (சு)

செப்பரிய சிறுவர்முதன் மற்றுமூப்பருமுனைச் சிந் தியாதவர்க ளில்லைத், தெளிவிலாதவர்கட் கடுத்தபெரிய ம்மை சின்னம்மைபல பெய்துநாளும், ஒப்பற்ற வேப் பிலை தனைக்கையி லளித்தென்பு முனையு முருக்கிநெஞ்ச, முருகும்படிச் செய்து தெரிவிக்கு நின்பெருமை யொரு வராற் சொல்லவசமோ, தப்பிநின்முத்திரை தரித்திடா

த்தேவருந் தருமாந்தருமுளர்கொலோ, சர்வஜீவாத்தும தயாபரிமகாதேவிசாம்பவியமலைவடுகி, இப்புவியனைத்து மகிழும் பெரியபாளையத் தெல்லையிலமர்ந்துவாழும், எல் லன்னவொளிர்சூரி நல்லன்ன நடைவீரி எல்லம்மை மக மாரியே (ரு)

சிங்கவாகனமேறி யெங்கும்பிரசித்தமாய்த் தேவமா தர்கள் துதிக்கத், திரள்பூத கணமார்ப்பரிக்கத் தடிக்கா ரர்சேவகர்கள் சூழ்ந்துவரவே, சங்கொலியுடுக்கையொடு பம்பையொடு சிங்கநாதம் பலமுழங்கவாரி, சத்சரண கிண்கிணி சிலம்புசிறுதண்டைச் சதங்கையொலி செய்ய நீடுஞ், செங்கைவளையொலி கலகலென்றிட வடுத்துனது சிந்தைகளி கூர்ந்துநாளுஞ், செகமீதுலாவிவரு மகாமந் திர சிரோன்மணி சகஸ்ரநாமி, இங்கிதமிகுந்தநிசூழ் பெரியபாளையத் தெல்லையி லமர்ந்துவாழும், எல்லன்ன வொளிர்சூரி நல்லன்னநடைவீரி எல்லம்மைமகமாரியே.

அகலாதவஞ்சப்ர பஞ்சமாயையிலுள மடுத்தினிய மனைவிமக்க, ளாம்பந்தபாசக் கடற்குண்மூழ்கிப் படும லைச்சலிவ்வள வென்றியான், புகலமுடியாதெழுத வேடி டங்கொள்ளாது புந்திவைத்திந்தவேளை, பன்மையேனு மினும் எனைத்தடுத்தாண்டருள் புரிந்திடா யெனிலுய்கி

லேன், தகைமேவு மின்னுபய பொற்பதாம்புயமதேதஞ்ச மென்று விரங்காத், தன்மையென்னோபெற்ற தாய்தனை யனமுகணீர் தனைத்துடைத்தாட்கொளாமல், இகழுமன ம்வருமோ சொலும்பெரியபாளையத் தெல்லையி லமர்ந்து வாழும், எல்லன்ன வொளிர்சூரி நல்லன்ன நடைவீரி எல் லம்மை மகமாரியே (எ)

ஒருநாளுமென்கவலை யொழியவில்லையேசிந்தையொ ருவழியிற்நிற்கவில்லையே, யுன்னரியவன்மிடி யரைகணமு மெனை விட் டொதுங்கவில்லையேநாளெலாங், கரிநாளலாற் சுகிர்த நாள்வருவ தில்லையேயென் கன்மத்தை யென்சொ ல்லுவேன், காசினியிலென்போலு மொருகொடிய பாவி நான் கண்டதில்லையேயனுதினந், திருநாள்சிறந்த தத்வாதி பரிபூரணி ஜெகம்பெற்ற சிந்தாமணி, தேவியன வரத கல்யாணி நாரணிவேணி திருவருள் புரிந்தாளுவாய், இருநாவலஞ் சோலைசூழ் பெரியபாளையத் தெல்லையில் யமர்ந்துவாழும், எல்லன்னவொளிர்சூரி நல்லன்னநடை வீரி எல்லம்மை மகமாரியே. (அ)

ஆதாரநீயெனக் கருதி யிந்நாள்வரையி லன்புகூர்ந் துன்னைநம்பி, ஆதிமுதலா யடுத்துத் தொண்டு செய்து மணுவளவு நெஞ்சுருக்காமலே, சூதாயிருக்கின்ற தென்

கொல்சுதனென்னுஞ் சுதந்தரமெனக்கில்லையோ, சொல்லரியதாயுநீ யல்லையோயானுநின் றொண்டர்களிலொருவனன்றோ, வேதாகமப் புராணங் கலைக்யானமும் விளம்பரிய நின்கீர்த்தியை, வீணேயெனெடுத் தியம்பத்தகாதென்றதோ வேறென்னபிழை செய்தனோ, ஏதாகிலுஞ் சொல்லுவாய் பெரியபாளையத் தெல்லையி லமர்ந்து வாழும் எல்லன்ன வொளிர்சூரி நல்லன்னநடைவீரி எல்லம்மை மகமாரியே. (கூ)

தபமிகுத் திடுகின்ற சமதக்கினி பத்தினியாய்த்த லையர்கடமைப்பயந்தும், சத்கமாசீலியாய் நித்தியவிநோதியாய்ச் சாஸ்வதசுயா தீதியாய், உபராகவில்லறநடாத்தி யற்புதமான வுயர்ந்தமழுவைத்தரித்து, ஒப்பரிய வரசகுல வைரியாய் மலைநாட்டை யுண்டாக்கிடும் புனிதனும், செயமேவு பரசுராமனையீன்று சமயபுர ஜெயமுற்றகொல்லாபுரம், செப்பரிய படைவேடு தென்னாற்றுகாடெனுஞ் சீர்மேவு கோயில்கொண்டு, இமராஜனுலகுளோர் புகழ்லோக மிதுவெனு மெழிற் பெரிய பாளையத் தெல்லையி லமர்ந்துவாழும், எல்லன்னவொளிர்சூரி நல்லன்ன நடைவீரி எல்லம்மை மகமாரியே. (ய)

சந்ததமு மாறுத வெம்பிணிகள் பலவுந் தடுத்தாள் வையென் றமகலாத், தன்மைமிகு நல்குர வகற்றுவாயெ

ன்றுஞ் சதாயுடந்தருள்வையென்றும், விந்தைபெறுதர் மார்த்த கர்மமோட்சச் சதுர்விதச் சித்தியுஞ் சிறந்து, வீறுபலசாம்ப்ராஜ்ய சித்தியுமளித்திம்மை வேண்டுவது தருவை யென்றும், செந்தமிழினூற்பதிக மொன்று சூட்டச் சிந்தையிற் கருதியே கூறினேன், திருவுளமிரங்கிரீ யங்கீகரித்து நின்சீரருள்புரிந் தாளுவாய், இந்திரலோகத்தையிகழும்பெரியபாளையத்தெல்லையி லமர்ந்துவாழும், எல்லன்ன வொளிர்சூரி நல்லன்ன நடைவீரி எல்லம்மை மகமாரியே. (கக)

கட்டளைக்கலித்துறை.

மாதேகமலமலர்வாழுஞ் செல்வியுமறைமலரோன்
ஆதாரநாவுறைவாணி யிந்திராணியு மராவமுடன்
போதானதுகொடுபோற்றிப் பணிந்திடும் பூரணியே
வாதாவருள் செய்யொணாதா நற்பாளையம் வாழுனையே

சேவித்தபேர்க்கருள் செய்யும்தயாபரி தேவியுனை
பாவித்தவென்னுடை பாவங்கள்யாவும் பரிகரித்தாள்
கோவித்திடலடியே யெங்களுய்குலன் கோகனக
வாவித்தடம்பலசூழ் பாளயத்தினில் வாழுனையே

பெரியபாளையம் மாரியம்மன்பதிகம்

முற்றிற்று.